பெரணமல்லூர் ஒன்றியம், விநாயகபுரம் ஊராட்சியில் செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டித் தந்து 10—க்கும் மேற்பட்ட ஊராட்சி மக்களின் குறைகளைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை மற்றும் பத்திரப் பதிவுத் துறை மீதான மானியக் கோரிக்கையில் நான் பேச வாய்ப்பளித்த எங்களது கழகத்தின் தலைவர் அவர்களுக்கும், எங்கள் முன்னாள் மாண்புமிகு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன் அவர்களுக்கும், துணைக் கொறடா அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

9. அறிவிப்பு

பேரவையின் மாலை கூட்ட நேரத்தில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை பிற்பகல் 4—00 மணிக்குக் கூடும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதற்குப் பதிலாக, இனி பிற்பகல் 4—30 மணிக்குக் கூடும் என்பதை பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 2019—2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(ஈ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(உ) கோரிக்கை எண் 11—முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'அ'